**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மறுவாழ்வு இல்லங்கள் – 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசிக்கும் இல்லவாசிகளுக்கு 2014, தீபாவளி தினத்தன்று கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி–சட்டை மற்றும் புடவை–ரவிக்கைத் துணி கூடுதல் செலவினத்தில் வாங்கி வழங்கப்பட்டமைக்கு பின்னேற்பாணை வழங்குவது மற்றும் கூடுதல் செலவினம் ரூ.14,814/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குவது – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1D) எண்.12** **நாள்: 08.07.2015**

**மன்மத–ஆனி 23, திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (1D) எண்.24, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 01.08.2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.483/மஇநிர்(3)/2014, நாள் 14.11.2014 மற்றும் 05.01.2015.

----

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015 ஆம் நிதியாண்டில், 2014, தீபாவளி தினத்தன்று, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1119 இல்லவாசிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 1 ஜதை வேட்டி–சட்டை மற்றும் புடவை–ரவிக்கை ஆகியவற்றினை ரூ.5,27,000/– செலவில் வாங்கி வழங்க, நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில், தற்போதைய நிலவரப்படி இல்லவாசிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதால் 1087 (ஆண் 598, பெண் 489) இல்லவாசிகளுக்கு, கோ–ஆப் டெக்ஸ் நிறுவனம் அனுப்பியுள்ள கடன் பட்டியலின்படி ரூ.5,41,814/–க்கு, 2014ம் வருட தீபாவளி பண்டிகைக்கு, வேட்டி சேலை மற்றும் சட்டைத் துணிகள் வாங்கி வழங்கப்பட்டது எனத் தெரிவித்து, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ரூ.5,27,000/– மட்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், வேட்டியின் விலையேற்றம் காரணமாக கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட விலை பட்டியலின்படி ரூ.5,41,814/– என்பதால், கூடுதலாக ரூ.14,814/– செலவினம் மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவித்து, 1087 இல்லவாசிகளுக்கு வேட்டி, சேலை மற்றும் சட்டைத் துணி வாங்கி வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட கூடுதல் செலவினம் ரூ.14,814/–னை அனுமதித்து, நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

[த.பி.பா]

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துரு கோ–ஆப்டெக்ஸ் நிறுவன கடன் பட்டியலுடன்கூட, அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, 2014–2015 ஆம் நிதியாண்டில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள 1087 இல்லவாசிகளுக்கு 2014, தீபாவளி தினத்தன்று வேட்டி–சட்டை மற்றும் புடவை–ரவிக்கைத் துணி ஆகியவற்றினை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகைக்கும் மிகையாக, கூடுதல் தொகையில் வாங்கி வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் செயலுக்கு பின்னேற்பும், கூடுதல் செலவினம் ரூ.14,814/–க்கு (ரூபாய் பதினான்காயிரத்து எண்ணூற்று பதினான்கு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் - I–திட்டத்தில் சேராதது – AI– தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வு இல்லம் – 46–உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருள்கள் (து.தொ.கு.2235–02–104–AI – 4609).**

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன், அத்துறையின் அலுவல் சாரா எண்.22809/நிதி(சந)/2015, நாள் 01.07.2015–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்**
கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், சென்னை–8.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந) துறை, சென்னை–9.
இ. கோ / உ. ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.